யாராவது வந்தால், அறைக்கு ஃபோன் பண்ணி இன்னார் உங்களைப் பார்க்க விரும்புகிறார்கள் என்று சொல்வார்கள். அவர்களை அறைக்கு அனுப்ப மாட்டார்கள். எம். எல். ஏ. அந்தப் பொதுவான இடத்திற்கு வந்து அவர்களைப் பார்ப்பார். அந்த முறை இருந்தால்தான் படிக்க வாய்ப்பாக இருக்கும். இப்போது ஒரு பாலிசி நோட்டைக் கூட முழுமையாகப் படிக்க நேரம் இல்லை. படிக்க எங்கே விடுகிறார்கள்? அந்தமாதிரி இங்கும் மாற்றம் செய்ய வேண்டும்.

மக்களுக்காகத்தான் உறுப்பினர்களும், அமைச்சர்களும், மற்றவர்களும் இருக்கிறார்கள். மக்களுடைய நன்மைக்கும் ஜனநாயகம் செம்மையாக இருப்பதற்கும் இந்தக் காரியங்கள் செய்யப்படுவது இன்றியமையாதது என்ற காரணத்தால்தான் இவற்றைச் சொல்லுகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர், அவை முன்னவர் எங்களுக்கு காரியமாக இருந்து இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று எல்லோர் சார்பாகவும் கேட்டு அமர்கிறேன்.

9. அமைச்சரின் அறிக்கைகள்.

(அ) கவியரசு கண்ணதாசன் அவர்கள் ஆஸ்தானக் கவிஞராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்த கல்வி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1949ஆம் ஆண்டு நாமக்கல் கவிஞர் திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் ஆஸ்தானக் கவிஞராக நியமிக்கப்பட்டார். அதற்குப்பின் ஆஸ்தானக் கவிஞரை நியமிக்கும் வழக்கம் கைவிடப்பட்டது. இவ்வரசு இப்பொழுது மீண்டும் அதனைப் புதுப்பிக்கக் கருதியுள்ளது.

கவியரசு கண்ணதாசன் அவர்களை ஆஸ்தானக் கவிஞராக நியமித்திட அரசு முடிவு செய்துள்ளது. அவருக்கு சிறப்பூதியமாக மாதம் ரூ. 1,000 வழங்கப்படும். மற்றும் உந்து வண்டி போன்ற வசதிகளும் அளிக்கப்படும்.

(ஆ) சித்த மருத்துவக் குழுவில் திரு. மாசிலாமணி அவர்கள் இடம் பெறுவது குறித்து நிதி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவக் குழுவில் மேலவை உறுப்பினர் திரு மாசிலாமணி அவர்கள் இடம் பெறுகிறார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.